**றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டம் - 2020**

றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் தந்திரோபாய மற்றும் சமூக நிலைமையை முன்னேற்றுவதற்காக தெற்கு அதிவேக பாதை மற்றும் மத்திய அதிவேக பாதைக்கும் இடையில் புதிய அதிவேக பாதையை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் அன்னளவாக ரூபா 286,000 மில்லியனானதுடன் அமைச்சரவை அமைச்சானது திறைசேரியின் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு வங்கி முறைமையினால் நிதியளிக்க தீர்மானித்திருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

2016 ஒகஸ்ட் 23 இலான அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம் 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட கஹதுடுவ இடமாறல் தொடக்கம் பெல்மடுள்ள வரையான றுவன்புற அதிவேகப்பாதையின் 73.9 கி.மீகளின் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் 4 வருடங்கள் கடந்ததன் பின்னர் 2020 ஜூலை 01 இல் பெறப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களின் புதிய தீர்மானத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், மொத்த வீதி நீளத்தில், கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான பிரிவின் 24.3 கி.மீகள் மாத்திரம் 2021 மே 03 இல் தீர்மானிப்பதற்காக கையளிக்கப்பட்டிருந்தது. கஹதுடுவ இடமாறலிலுள்ள 2கி.மீகளின் நிர்மான வேலைகள் மற்றும் இங்கிரிய தொடக்கம் பெல்மடுள்ள வரையான பிரிவின் 47.6 கி.மீ வீதி நீளம் என்பன இன்னும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தகவல்களின் பிரகாரம், கஹதுடுவ இடமாறல் தொடக்கம் இங்கிரிய வரையான 24.3 கி.மீ றுவன்புர அதிவேகப்பாதையின் நிர்மானம் விலை மனுக்களை அழைக்கும் நோக்கத்திற்காக 4 வேரான ஒப்பந்த பொதிகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு ஒப்பந்தம் மாத்திரமே விலைமனு ஆவணத்தின் பிரிவு 3 இல் குறிப்பிடப்பட்ட விலைமனு நிபந்தனையின் பிரகாரம் விலைமனுதாரரிற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஸ்திரமான அமைச்சரவை நியமித்த பெறுகை குழு மேற்கூறிய விலைமனு நிபந்தனைகளை கைவிடவும் ஒவ்வொரு ஒப்பந்த பொதிகளிற்கும் குறைந்த கிரயத்தினை கருத்தில் கொண்டு ஒரு நிர்மான கம்பனிக்கு மொத்த 4 ஒப்பந்த பொதிகளையும் வழங்கியிருந்தது. அதன்படி, 2020 ஜூன் 23 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் பிரிவு 2.1.3 இல் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோல்கள் வெற்றிபெற்றிருக்கவில்லை. | வேறான அமைச்சரவை அனுமதி ஒபபந்த நிபந்தனைகளை கைவிடவும் 4 ஒப்பந்த பொதிகளையும் ஒரு நிர்மான கம்பனிக்கு வழங்கவும் பெறப்பட்டிருந்தது. | வெளிப்படுத்தப்பட்ட விதிகள் மாற்றியமைக்கப்படல் வேண்டும் அல்லது மேலதிக விதிகள் 2006 பெறுகை வழிகாட்டியின் பிரிவு 5.3.20 இன் பிரகாரம் மதிப்பிடல் கட்டத்தின் போது அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | நெடுஞ்சாலையின் நிர்மானத்திற்கான விபரமான நீரியல் கற்கை ஒப்பந்ததாரரிற்கு கையளிக்கப்பட்டிருந்தும், ரூபா 8.6 மில்லியன் முற்பணம் ஓர் ஒப்பந்த உடன்படிக்கையும் இல்லாமல் இலங்கை காணி மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான அதிவேகப்பாதைக்கான தரவு சேகரிப்பிற்காக ஆர்டிஏ வினால் ஏற்கனவே செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பனவு (ரூபா 8,593,398.00) கட்டம் 2 மற்றும் 3 இனால் திருப்பி | முற்பணதொகை ரூபா 8,593,398 இற்காக எஸ்எல்எல்ஆர்டிசீ இடமிருந்து உறுதிப்படுத்தலினை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உடனடியாக திரும்ப |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்படும். விபரமான நீரியல் கற்கை எஸ்எல்எல்டீசீ இனால் செய்யப்பட்டிருந்தது. | பெறப்படலும் வேண்டும். |
| (இ) | 2020 ஜுலை 01 இலான அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் சிவில் வேலைகளிற்கான நிதி வசதிகள் நாட்டின் உள்நாட்டு வங்கிகளினூடாக ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அதிவேகப் பாதையிற்கான ஒப்பந்தம் 2021 மே 03 இல் கையளிக்கப்பட்டிருந்தும், செயற்திட்டத்திற்கான நிதி வசதிகள் 2021 ஜுலை 30 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த கையளிப்பு திகதி 2021 மே 3 ஆக மாற்றப்படல் வேண்டும். 2021 ஜுலை 16 இல் ரூபா 3.25 பில்லியன் தொகையான என்எஸ்பீ கடன் வசதி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3.20 பில்லியன் தொகை ஓர் முற்பண கொடுப்பனவாக விடுவிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட செலவினங்கள் (ரூபா 12.95 பில்லியன்) பீஓசீ கடன் வசதி ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | இலக்கிடப்பட்ட திகதியில் அதிவேகப்பாதையினை பூர்த்திசெய்ய உள்நாட்டு வங்கியூடாக மொத்த கடன் தேவைப்பாடு ரூபா 54 பில்லியனையும் ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 சுற்றுச் சூழல் விசயங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| தகவலின் பிரகாரம், இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான 47.6 கி.மீ வீதிப்பிரிவின் சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கைக்கான (ஈஐஏ) அனுமதி பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக 2021 ஜுன் 30 இல் உள்ளவாறு கூட மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டமானது மொத்த சுரங்கப்பாதையின் நீளத்தினை குறைக்கவும் இயற்கை அனர்த்தங்களை குறைத்து அதிவேகப்பாதைக்கு புதிய சரியான வழியை அடையாளம் கானவும் வீதி அடிச்சுவட்டின் ஆரம்ப சாத்தியவள கற்கையினை மாற்ற தீர்மானித்திருந்தது. அதன் பெறுபேறாக, மொத்தமாக ரூபா 6.84 மில்லியன் 2016 இல் ஆரம்ப சாத்தியவள கற்கைக்கு ஏற்பட்ட ரூபா 394 மில்லியனிற்கு மேலதிகமாக செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றக்கொண்டனர். | காணி கொள்வனவு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான 47.6 கி.மீ மிகுதி வீதி பிரிவிற்கு சுற்றாடல் விளைவு மதிப்பீட்டு அறிக்கையினை (ஈஐஏ) பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய மொத்த காணித்துண்டுகள் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான வீதி பிரிவிலுள்ள 415 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 2,579 காணித்துண்டுகளாகவிருந்தது. பிரிவு 38 (அ) 2017 – 2018 ஆம் ஆண்டில் 1,933 காணித்துண்டுகளிற்காக வர்த்தமானியிடப்பட்டிருந்தும், 2021 ஜுன் 30 இல் உள்ளவாறு கூட எவ்வித காணித்துண்டுகளிற்கும் இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒப்பந்த நிபந்தனையின் வகுதி – II இன் பிரகாரம் ஒப்பந்ததாரரிற்கு தளத்தின் நிலையினை கையளிப்பது சாத்தியமற்றதாகும். | தற்போதைய காணி சுவீகரிப்பு செயன்முறை கீழ்வருமாறு;<br>38 (அ) பிரசுரிக்கப்பட்ட மொத்த துண்டுகள் 2060<br>இழப்பீடு வழங்கப்பட் துண்டுகள் 35<br>செலுத்தப்பட்ட இழப்பீடு 141.79 மில்லியன்<br>ஒப்பந்ததாரர் வசம் கையளிக்கப்பட்ட மொத்த துண்டுகள் 1511 | இலக்கிடப்பட்ட திகதிகளில் காணிசுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்ய பிரதேசசெயலகங்கள், நிளஅளவைதிணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்துடன் முறையான ஒருங்கிணைப்பை வைத்திருத்தல் வேண்டும். |

## 2.5 மனிதவள முகமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டததிற்கான முகாமைத்துவ சேவைகள் திணைககளத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளனி 37 உத்தியோகத்தர்களாகும். இருப்பினும், 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களில் 13 செயற்திட்டத்தின் செயற்பாட்டு மட்டத்திலாகும். | ஆட்சேர்ப்புக்கள் செயற்திட்ட நடவடிக்கைகளின் செயலாற்றலுடனான செயற்திட்ட ஆளனிகளின் தேவைப்பாட்டின் அடிப்படையில் செய்யப்பட்டது. தற்போது பீஎம்யூவின் அனுமதிக்கப்பட்ட ஆளனியின் கீழ் 28 உத்தியோக உறுப்பினர்கள் வேலை செய்கின்றனர். | நேர அடிப்படையில் செயற்திட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி செய்ய தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கவும் இலக்கிடப்பட்ட திகதியில் செயற்திட்ட வேலைகளை பூர்த்தி செய்யவும் செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |